www.Padasalai.Net www.TrbTnpsc.Com

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு - 2021-2022
## அலகுத்தேர்வு-I

| | | | |
|---|---|---|---|
| பாடம் | : தமிழ் | நேரம் | :1.30 |
| இயல் எண் | : 1 | மதிப்பெண் | : 50 |

### பகுதி - I

**I அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
   அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை , சீர் எதுகை
   இ) அடி எதுகை, சீர்மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை
3. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க
   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
4. பொருத்துக
   அ) தமிழ் அழகியல் -1. பரலி சு.நெல்லையப்பர்
   ஆ)நிலவுப்பூ -2. தி.சு.நடராசன்
   இ) கிடை -3. சிற்பி பாலசுப்பரமணியம்
   ஈ)உய்யும் வழி -4. கி.ராஜ நாராயணன்
   அ) 4,3,2,1 ஆ)1,4,2,3 இ)2,4,1,3 ஈ) 2,3,4,1
5. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்
   க) பாண்டியரின் காலத்தில் கொலுவிருந்தது
   உ)பொதிகையில் தோன்றியது.
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ)க, உ இரண்டும் சரி இ)ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
6. BIOGRAPHY என்பதன் தமிழ்ச்சொல்லை தேர்ந்தெடுக்கவும்.
   அ) நூல் நிரல் ஆ)புனைவு இ)கையெழுத்துப் பிரதி ஈ) வாழ்க்கை வரலாறு
7. தண்டியலங்காரம் ....................................................என்பதன் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டதாகும்
   அ)நேமி நாதம் ஆ)அவந்தி சுந்தரி இ) காவியதர்சம் ஈ)மேகசந்தேசம்
8. கீழ்க்கண்டவற்றுள் சிற்பியின் சாகித்திய அகாடெமி விருது பெற்ற நூல் எது?
   அ)ஒளிப்பறவை ஆ)பூஜ்யங்களின் சங்கலி
   இ)சூரிய நிழல் ஈ)ஒரு கிராமத்து நதி
9. "நுந்தை தந்தைக்கு இவன் தந்தை " என்று பாடும் நூல்
   அ)நற்றிணை ஆ)புறநானூறு
   இ)அகநானூறு ஈ)கலித்தொகை
10. பிழையான தொடரைக் கண்டறிக
    அ)காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
    ஆ)மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தார்
    இ)காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
11. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய் , பயனிலை என்று வருவதே மரபு
    கருத்து 2: தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
    அ)கருத்து 1 சரி ஆ)கருத்து 2 சரி
    இ)இரண்டு கருத்தும் சரி ஈ)கருத்து 1 சரி, 2 தவறு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது என்று கூறியவர்
அ)பாரதிதாசன் ஆ)சிற்பி பாலசுப்ரமணியம்
இ)பாரதியார் ஈ)பரலி சு.நெல்லையப்பர்
13. பல் + துளி என்பது எவ்வாறு புணரும் ?
அ)பஃதுளி ஆ)பல்துளி
இ)பல்றுளி ஈ)பலதுளி
14. சிறுகதை ஆசிரியர், முதல் பாதி நவீனம் ?
அ)மறைமலை அடிகள் ஆ)புதுமைப்பித்தன்
இ)ஜெயகாந்தன் ஈ)அசோகமித்திரன்

பகுதி — 2

II எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3x2 = 6

15. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக
16. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை
17. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
18.விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்து தொடர் அமைக்க
19.பாரதி நடத்திய இதழ்கள் இரண்டினைக் கூறுக

III எவையேனும் ஏழனுக்கு விடை தருக 7x2 = 14

20. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
21. "உள்ளங்கை நெல்லிக்கனி போல" என்ற உவமைத்தொடரை சொற்றொடரில் அமைத்து எழுதுக
22. பொருள் வேறுபாடு அறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக- கிளி, கிலி
23. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம்- இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள் யாவை?
24. தமிழாக்கம் தருக
I) Knowledge of language is the doorway to wisdom
II) The limits of my language are the limits of my world
25. எவையேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக
I) சாய்ப்பான் II) உயர்ந்தோர்
26. எவையேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக
I) வானமெல்லாம் II) ஆங்கவற்றுள்
27. இலக்கணக்குறிப்பு தருக: I) வெங்கதிர் II) வியர்வை வெள்ளம்
28. ஈரொற்றாய் வராத வல்லின மெய்கள் யாவை?

IV எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3x4 = 12

29. ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி என்ற பாடலில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக
30. சங்கப் பாடல்களில ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக
31." செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்
செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்" தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக
32.ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக
33.பின்வரும் இருபாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையினானே- நன்னூல் | மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்குதற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே!<br>கூவி வா ,வா! – சிற்பி பாலசுப்பிரமணியம் |

V அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 1x4 = 4

34. ." ஓங்கலிடை" எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com